மாலைமலர்
இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்
MAALAI MALAR
சென்னை 09-08-2011 (செவ்வாய்க்கிழமை)

You Compare Airline Prices
MyInsuranceClub.com







# எம்.எஸ்.சுவாமிநாதன் அறக்கட்டளை நிறுவனர் தின விழா: பருவ நிலையை அறிய மீனவர்களுக்கு செல்போன்; மத்திய மந்திரி ஜெயந்திநடராஜன் வழங்கினார்

Chennai ஞாயிற்றுக்கிழமை, ஆகஸ்ட் 07, 2:42 PM IST



DTCP Approved Plots
Guduvanchery
[X]

வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கான சிட்டிபேங்க் ரூபாய் கணக்கு இப்போதே விண்ணப்பியுங்கள்!



சென்னை, ஆக. 7-



டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை நிறுவனர் தின விழா தரமணியில் இன்று நடந்தது.

இதையொட்டி 4 நாள் கருத்தரங்கை மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை மந்திரி ஜெயந்தி நடராஜன் தொடங்கி வைத்தார். விழாவில் மீனவர்களுக்கு உதவும் வகையில் இலவச செல்போன்களையும் வழங்கினார்.

எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் தமிழக கடலோர பகுதிகளில் வசிக்கும் மீனவர்களுக்கு இவை வழங்கப்படுகிறது. இந்த செல்போன் மூலம் மீனவர்கள் தங்களுடைய சந்தேகங்களை 9282442311, 9282442312 ஆகிய ஹெல்ப் லைன் எண்களுக்கு தொடர்பு கொண்டு பருவநிலை மாற்றம், காலநிலை முன் எச்சரிக்கை, கடல் சீற்றம், கடல் வளம், மீன்கள் கிடைக்கும் இடங்கள் உள்பட மீன் வளத்துறை பற்றிய விளக்கங்கள் பெற முடியும்.

இந்திய தேசிய கடல் தகவல் சேவை மையத்துடன் இணைந்து எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் இத்திட்டத்தை செயல்படுத்தியுள்ளது. மீனவர்களுக்கு இந்த செல்போன் மிகவும் பயன் உள்ளதாக இருக்கும் என்று ஜெயந்தி நடராஜன் கூறினார்.

விழாவில் அவர் பேசியதாவது:-

பேராசிரியர் எம்.எஸ். சுவாமிநாதன் பிறந்த நாள் விழா கொண்டாடப்படும் இந்நாளில் இங்கு இருக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்திருக்கிறது. உங்களுடன் சேர்ந்து நானும் அவரை வாழ்த்துகிறேன்.

எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளையின் 21-ம் ஆண்டு அறிக்கையை வெளியிடுவதிலும் மகிழ்ச்சி அடைகிறேன். நமது நாட்டில் உள்ள முன்னணி ஆராய்ச்சி நிறுவனங்களில் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளையும் ஒன்று. விவசாயம் மற்றும் கிராம வளர்ச்சியில் இந்நிறுவனம் பல்வேறு ஆய்வுகளை பல ஆண்டுகளாக மேற்கொண்டு வருகிறது.

வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கான சிட்டிபேங்க் ரூபாய் கணக்கு இப்போதே விண்ணப்பியுங்கள்!

இந்திய அளவிலும் சர்வதேச அளவிலும் எடுக்கப்படும் கொள்கை முடிவுகளில் பேராசிரியர் எம்.எஸ்.சுவாமிநாதனின் பங்கும் இருந்து வருகிறது. விவசாய துறை மற்றும் கிராம வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளில் இந்தியா சந்தித்து வரும் பிரச்சினைகளுக்கு, சாத்தியமான தீர்வுகளை இந்த அறக்கட்டளை வழங்கி வருகிறது. இதற்காக இந்த அறக்கட்டளையின் விஞ்ஞானிகளையும், ஆராய்ச்சியாளர்களையும் பாராட்டுகிறேன்.

இந்த ஆண்டு "வன ஆண்டாக" அறிவிக்கப்பட்டுள்ளது. விவசாயத்துக்கு அடுத்தபடியாக இந்தியாவில் காடுகள் வளர்ப்புக்குத்தான் அதிகளவில் நிலம் பயன்படுத்தப்படுகிறது.

இந்திய புள்ளியல் நிறுவனத்தின் சமீபத்திய அறிக்கையின்படி, இந்தியாவின் மொத்த நிலப்பரப்பில் 19.27 சதவீதம் நிலப்பரப்பில் காடுகள் உள்ளன. சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் காடுகளின் பங்கு மகத்தானது. இந்தியா 600 பாதுகாக்கப்பட்ட பகுதிகளை கொண்டுள்ளது. இதில் 95 தேசிய பூங்காக்களும், 500 வன விலங்கு சரணாலயங்களும் அடங்கும்.

நமது நாடு நீண்ட கடற்கரையை கொண்டுள்ளது. கடலோர மண்டலங்களை நிர்வகிப்பது மிகவும் சிக்கலான பிரச்சினை ஆகும். நமது கடலோர சூழல் தன்மையானது வெள்ளம், சுனாமி போன்ற இயற்கை பேரிடர்களில் இருந்து காக்கிறது.

இந்தியாவின் கடலோர பகுதியின் மொத்த நீளம் 7 ஆயிரத்து 500 கி.மீ. ஆகும். சுமார் 29? கோடி பேர் கடலோரத்தில் வசிக்கின்றனர். இது நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 26 சதவீதம் ஆகும். இந்தியாவில் 1.6 மில்லியன் சதுர கிலோ மீட்டர் பரப்பளவுக்கு "பிரத்யேக பொருளாதார மண்டலம்" அமைக்கப்பட்டுள்ளது.

நமது கடலோரப் பகுதியில் 6 ஆயிரத்து 700 சதுர கி.மீ. பரப்பளவுக்கு மாங்குரோவ் காடுகள் உள்ளன. மாங்குரோவ் காடுகளையும், பவள பாறைகளையும் பாதுகாக்க சுற்றுச்சூழல் அமைச்சகம் கூடுதல் முயற்சிகளை எடுத்துள்ளது.

கடலோர பகுதிகளில் குடியேறுபவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால், கடந்த 30 ஆண்டுகளில் 12 சதவீதம் மாங்குரோவ் காடுகள் அழிக்கப்பட்டுள்ளன.

கடலோர நிர்வாகத்தை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மீன் பிடி துறை 60 லட்சம் பேருக்கு மேல் வேலை வாய்ப்பை வழங்கி உள்ளது. இந்தியாவின் மொத்த தேசிய வருவாயில் மீன்பிடி தொழில் மூலம் 1.2 சதவீதம் வருவாய் கிடைக்கிறது. ஏழைகள் பலருக்கு மீன்தான் புரோட்டீனை அளிக்கக்கூடிய சத்து உணவாக இருந்து வருகிறது. உலக வங்கி உதவியுடன், ஒருங்கிணைந்த கடலோர மண்டல மேலாண்மை திட்டத்தை சுற்றுச்சூழல் அமைச்சகம் தொடங்கியுள்ளது.

கடலோர பாதுகாப்பு மேலாண்மை தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தில் நிலையான கடலோர மேலாண்மைக்கான தேசிய மையம் ஏற்படுத்தப்படும். இது எம்.எஸ்.சுவாமி நாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை உள்பட 7 மாநில அளவிலான ஆராய்ச்சி நிறுவனங்களின் கூட்டு முயற்சியுடன் அமைக்கப்படுகிறது.

இவ்வாறு ஜெயந்தி நடராஜன் பேசினார்.

விழாவில் பேராசிரியர் எம்.எஸ்.சுவாமிநாதன், செயல் இயக்குனர் அஜய்பரிதா, இங்காய்ஸ் இயக்குனர் ஷெனாய், குவல்காம் மூத்த மேலாளர் ஆஷிஷ் அகர்வால், இந்து ஆசிரியர் ராம், ஐ.ஓ.பி. செயல் இயக்குனர் நுபுர் மித்ரா மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர்.





அ+ அ-

மதிப்பீடு செய்க ☆☆☆☆☆ இமெயில் பிரதி Share / Save


## கருத்து

Read Comments Post Comments

Sunday, August 07,2011 03:56 PM, பாலசுப்ரமணியன் said:

பத்மவிபூஷன் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களுக்கு எனது உளம்கனிந்த பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்.

On Sunday, August 07,2011 08:37 PM, தமிழன் said :

பசுமை புரட்சியே வாழ்க வளர்க

இக்கருத்துக்கு உங்கள் கருத்து .....?





Name Mobile City Email Id Go

Insurance is the subject matter of solicitation | Max Bupa Health Insurance Co. Ltd. IRDA Registration No. 145 For more details on terms and conditions, exclusions and waiting period, please read sales brochure of Heartbeat Health Insurance Policy carefully before concluding a sale.'Max', 'Max logo', 'Bupa' and HEARTBEAT logo are trademarks of their respective owners and are being used by Max Bupa Health Insurance Company Limited under license.









தனித்தன்மை பாதுகாப்பு | எங்களைப்பற்றி | தொடர்புகொள்ள | ஆலோசனைகள் | வலைத்தள தொகுப்பு

காப்புரிமை 2011, © Malar Publications Ltd. | Powered by VPF